[2018 ஜூன் 26

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விதிகளின்படி ஒரு கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட வேண்டுமென்று சொன்னால், தினமும் சிகிச்சைக்கு வருகின்ற கால்நடைகளின் எண்ணிக்கை 40–க்கும்மேல் இருத்தல் வேண்டும். அதேபோல உள் நோயாளி பிரிவு, ஊடுகதிர் பிரிவு, கருவி நிறுவுதல் போன்ற வசதிகளை உருவாக்குவதற்கு போதுமான இட வசதிகள் இருத்தல் வேண்டும். அப்படியிருக்கும்பட்சத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்த மருந்தகத்தை, கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவதற்கு துறை அதிகாரிகளை அங்கே அனுப்பி வைத்து, தேவைப்படுமாயின் நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு எடுத்துச் சென்று, பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 218, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

218—

ஆரம்ப சுகாதார நிலையம்

***20193—டாக்டர் ஆர்.டி. அரசு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யூர் தொகுதி, சித்தாமூர் ஊராட்சி ஒன்றியம், சித்தாற்காடு ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2018 ஜூன் 26]

(அ) மற்றும் (ஆ) செய்யூர் தொகுதி, சித்தாமூர் ஊராட்சி ஒன்றியம், சித்தாற்காடு ஊராட்சியில் அரசு விதிமுறைகளின்படி புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.*

டாக்டர் ஆர்.டி. அரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யூர் தொகுதிக்குட்பட்ட சித்தாமூர் ஊராட்சி ஒன்றியம், சித்தாற்காடு ஊராட்சி ஏழையெளிய, வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற மக்கள் அதிகமாக வசிக்கின்ற பகுதியாகும். அடிப்படை வசதிகள்கூட இல்லாத அந்தப் பகுதியிலே 30,000–க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர். விடால், பாலையூர், தண்ணீர்பந்தல், நாங்குளத்தூர், ஆற்காடு, அமைந்தகருணை, வயலூர், விளாங்காடு, கொக்கரந்தாங்கல், ஜமீன்புதூர், போளூர் ஆகிய சுற்று வட்டாரப் பகுதிகள் அடங்கியது அந்தப் பகுதி. ஆகவே, பரிசீலனையில் இல்லை என்பதை மறுபரிசீலனை செய்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க முன்வர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு, முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே, தங்கள் தொகுதிக்கு ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டுமென்று அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுமே கேட்கிறார்கள். மத்திய அரசு அதற்கு விதிமுறை வகுத்திருக்கிறது. அதாவது, 8 கிலோ மீட்டர் இடைவெளியும், மக்கள்தொகை 30 ஆயிரமும் இருக்க வேண்டுமென்று அந்த விதிமுறையில் இருக்கிறது. தாங்கள் சார்ந்திருக்கக்கூடிய ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மக்கள்தொகைக்கேற்ப, 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைக்கேற்ப, அரசு விதிமுறைகளின்படி மறு ஆய்வு செய்து, நடவடிக்கை எடுக்கப்படும்*

என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.

டாக்டர் ஆர்.டி. அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதிலை ஏற்கின்றேன். அந்தப் பகுதியிலிருந்து செய்யூர் அரசு மருத்துவமனைக்கு 10 கிலோ மீட்டர் தூரமும், கடப்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 12 கிலோ மீட்டர் தூரமும், சூணாம்பேடு ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து 15 கிலோ மீட்டர் தூரமும் மற்றும் பொளம்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து சற்றேறக்குறைய 23 கிலோ மீட்டர் தூரமுள்ள நிலையில் அவசரகால சிகிச்சை பெற வேண்டுமென்றாலும், இரவு நேரங்களில் மருத்துவத் தேவைக்கு போக வேண்டுமென்றாலும், பேருந்து வசதிகள் இல்லாத நிலை இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செய்யூர் அரசு மருத்துவமனை தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டபோதிலும், அந்த மருத்துவமனையின் உள்கட்டமைப்பு வசதிகள் போதுமானதாக இல்லை. மருத்துவர்கள், மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் இல்லாத நிலை உள்ளது. அதேபோல், தரம் உயர்த்தப்பட்ட கடப்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இங்கே பாருங்கள். (குறுக்கீடு) மக்கள் நல்வாழ்வுத் துறை சம்பந்தப்பட்ட கேள்வி என்பதால் நிறைய உறுப்பினர்கள் கேள்வி கேட்க கையைத் தூக்குகிறார்கள். மூலக் கேள்வி கேட்ட நீங்களே இப்படி நேரத்தை எடுத்துக்கொண்டால், மற்ற உறுப்பினர்கள் பேசுவதற்கு நான் எப்படி வாய்ப்புத் தர முடியும்? (குறுக்கீடு) இப்போது நேரம் என்னவென்று பாருங்கள். இன்னும் இரண்டு கேள்விகள் இருக்கின்றன. (குறுக்கீடு) நீங்கள் டாக்டர் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அதற்காக டாக்டரே அதிக நேரம் எடுத்துக்கொண்டு, மற்றவர்களுக்கு வழங்கப்படும் வாய்ப்பை கெடுக்க வேண்டாம். உரையை முடியுங்கள்.

டாக்டர் ஆர்.டி. அரசு: கிழக்கு கடற்கரை சாலையிலிருந்து 50 கிலோ மீட்டர் தூரத்தில் இந்த மருத்துவமனை மட்டும்தான் உள்ளது. விபத்துகள் அதிகமாக ஏற்படுகிற பகுதி என்பதால்,

2018 ஜூன் 26]

platinum hour, golden hours–*களில் காப்பாற்றப்பட வேண்டுமென்றால்,* Emergency and Trauma Care Centre *இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் அமைக்கப்பட வேண்டும். மேலும், இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தினை அரசு மருத்துவமனையாகத் தரமுயர்த்த இந்த அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யூர் தாலுகா மருத்துவமனைக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இரவு நேரங்களில் பேருந்து வசதிகள் இல்லாததால் பொதுமக்களுக்கு சிரமம் ஏற்படுகிறது என்று தாங்கள் பேசுகின்றபோது தெரிவித்தீர்கள். இரவு நேரங்களில் பேருந்து வசதி இல்லாத இடங்களில்கூட,* 24 x 7 108 Ambulance service *தமிழ்நாடு முழுவதும் மிகச் சிறப்பாக இயக்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, அந்த நிலை இல்லை. தாங்கள் குறிப்பிடுகின்ற* ECR *சாலையில், ஏற்கெனவே ஒரு* Emergency and Trauma Care Centre *தொடங்கப்பட்டு, பொதுமக்களிடையே மிகச் சிறப்பான வரவேற்பைப் பெற்றிருக்கிறது. இன்னொரு* Emergency and Trauma Care Centre–*ஐ மகாபலிபுரத்தை மையமாக வைத்து, விரைவிலே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் திறக்க இருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியை சொல்கிறேன். தாங்கள் குறிப்பிட்ட கோரிக்கையையும் அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* V.T. *கலைச்செல்வன் அவர்கள்.*

திரு. V.T. கலைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மாவின் ஆத்மாவை வணங்குகிறேன். விருத்தாசலம் ஒன்றியத்திற்குட்பட்ட கருவேப்பலங்குறிச்சி கிராமத்தில் கடந்த 15 ஆண்டுகளாக ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. அந்த ஆரம்ப சுகாதார நிலையம் குறுகிய இடத்திலே இருக்கின்ற காரணத்தினால், 24 மணி நேரமும் இயங்கக்கூடிய மருத்துவமனையாகத் தரமுயர்த்த முடியாத*

நிலை இருக்கிறது. விருத்தாசலம், பெண்ணாடம் சாலையில் அரசு நிலம் 5 ஏக்கர் உள்ளது. அந்த இடத்திலே புதிய கட்டடத்தைக் கட்டி, அந்த மருத்துவமனையை 24 மணி நேரமும் இயங்கக்கூடிய மருத்துவமனையாகத் தரமுயர்த்தித் தர அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கக்கூடிய* upgradation, *தரமுயர்த்துகின்ற கோரிக்கையை, அந்தச் சுகாதார நிலையத்தில் உள்ள நோயாளிகளின் எண்ணிக்கைக்கேற்ப அரசு கனிவோடு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

முற்பகல் 11–15

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் தரமுயர்த்தப்பட்ட 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார மருத்துவமனைகளிலெல்லாம் பணிக்கு வந்த மருத்துவர்கள் இந்த ஆண்டு நடைபெற்ற 'நீட்' தேர்வின் மூலமாகத் தேர்ச்சி பெற்று மேற்படிப்புக்கு சென்றுவிட்டனர். அதனால் அந்த மருத்துவமனைகளில் போதிய மருத்துவர்கள் இல்லாததால் அங்கே வருகின்ற பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். உதாரணத்திற்கு, பழனி* D.D.(Health)*–க்குட்பட்ட கீரனூர் பேரூராட்சியில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் நிறைய பேர் வசித்து வருகிறார்கள். அங்குள்ள மருத்துவமனையில் ஒரு மருத்துவர்தான் இருக்கிறார்; செவிலியரும் இல்லை. அது 30 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனை. இப்படி, தமிழ்நாடு முழுவதும் போதிய மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் இல்லாத காரணத்தால், பொது மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, காலியாக இருக்கின்ற இடத்தையெல்லாம் விரைவிலே நிரப்புவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

2018 ஜூன் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறையிலே தொடர்ந்து மருத்துவர் மற்றும் செவிலியர்களை பணி நியமனம் செய்து கொண்டிருக்கிறோம். தாங்கள் குறிப்பிட்டதுபோல, ஜூன் மாதத்தில் 2, 3 வாரங்கள் எங்கள் துறைக்கு ஒரு சவாலாக இருக்கும்.* M.B.B.S. *படித்த மருத்துவர்கள் தாங்கள் குறிப்பிட்டதுபோல,* NEET *தேர்வில் தேர்ச்சி பெற்று* P.G. *படிக்கச் செல்வார்கள். 6,010 மருத்துவர்கள் ஆரம்ப சுகாதார நிலையத்திலும், மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திலும் பணியாற்றி வருகிறார்கள். 700 பேர்* P.G. *படிக்கச் சென்றிருக்கிறார்கள். 700 பேர்* P.G. *படிப்பதற்கு செல்வதால், உடனடியாக நாங்கள்* M.B.B.S. *படித்த 1,500 புதிய மருத்துவர்களை நியமனம் செய்வதற்கான* notification–*ஐ* MRB *மூலம் வெளியிடப்போகிறோம். வெகுவிரைவிலே மருத்துவர்கள் நியமனம் செய்யப்படுவார்கள். இதற்கிடையில்* P.G. *படிப்பை முடித்துவிட்டு திரும்பக்கூடிய மருத்துவர்கள் தாங்கள் குறிப்பிட்ட பழனி மற்றும் ஒட்டன்சத்திரம் போன்ற* Non–Taluk *மருத்துவமனைகளில் நியமிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகையினால், ஒரு சிறிய இடைவெளி இருக்கும்.*

செவிலியர் பணியிடத்தைப் பொறுத்தவரையில், திண்டுக்கல் மாவட்டத்தின் எந்தப் பகுதியிலும் காலிப் பணியிடம் என்பது இல்லை. MRB *மூலமாகச் செவிலியர் பணியிடம் முழுவதுமாக நிரப்பப்பட்டிருக்கிறது. ஒருசில வாரங்களுக்குள், அவர்கள்* relieve *ஆகி* join *செய்யக்கூடிய அந்த* gap *தான் மருத்துவர்கள் இல்லாதது போன்ற செயற்கையான ஒரு நிலையாகத் தோன்றும். உடனடியாக, இதில் அரசு மிகுந்த கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். 6,010 பேரில் 700* Doctors have gone for P.G. *700–ஐ* immediate *ஆக நாங்கள்* fill up *செய்துவிடுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அரசின் கவனத்திற்கு நான் இதைக் கொண்டு வந்திருக்கிறேன். அருப்புக்கோட்டை தொகுதியில் உள்ள செம்பட்டி கிராமத்தில் PHC–Primary Health Centre வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அந்தப் பகுதியிலே 20,000 மக்கள் தொகை இருக்கிறது. Thick ஆன population இருக்கிற இடம். கூலித் தொழிலாளர்கள், சிறு விவசாயிகள் இருக்கிற பகுதியாக இருக்கிற காரணத்தால், அதற்கு அரசு முன்னுரிமை கொடுத்து, அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, அருப்புக்கோட்டை G.H–ல் பிரசவம் பார்க்கக்கூடிய மருத்துவர்கள் இல்லை. அதனால், விருதுநகரில் இருந்து deputation போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதனால், இரண்டு பக்கமும் வேலை கெடுகிற காரணத்தால், இந்த இரண்டு கோரிக்கைகளையும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மகப்பேறு மருத்துவர்களைப் பொறுத்தவரையில், Speciality முடித்த மருத்துவர்கள், அண்ணன் அவர்களுக்குச் சொன்னதுபோல, service P.G.–ஐ நாங்கள் counsellingமூலம் நிரப்பி விட்டோம். Non–service P.G. இப்போது counselling–க்காக காத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்கான counselling இப்போது நடைபெறவிருக்கிறது. அதில், அருப்புக்கோட்டைக்கு முன்னுரிமை கொடுத்து வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிய P.H.C.–ஐப் பொறுத்தவரையில், கடந்த ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட P.H.C. எல்லாம் திறப்பதற்கு அரசாணை வெளியிடப்பட்டு, இப்போது திறக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டு எத்தனை புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறக்கப்படும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள். அதிலே, தாங்கள் குறிப்பிடுகின்ற செம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

2018 ஜுன் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.*

டாக்டர் (திருமதி) பூங்கோதை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம் தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், மருதம்புதூர் பஞ்சாயத்து, மருதம்புதூர் கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் தினந்தோறும் 90 முதல் 100 வரையிலான புற நோயாளிகளும், மாதந்தோறும் குறைந்தபட்சம் 10 பிரசவங்களும் நடைபெறுகின்றன. மாதந்தோறும் 40 புதிய* registrations ï¬ìªðÁAø¶. NEET *தேர்வு எழுதாத ஓர் அர்ப்பணிப்பு உணர்வோடு, டாக்டர் பிரபு என்பவர் அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற வேளையில், அங்கே நான் ஆய்வுக்குச் சென்றிருந்தபோது, மக்கள் பல்வேறு கோரிக்கைகளை என்னிடம் வைத்தார்கள். சில நேரங்களில் அவர்களையே போய்* IV Fluids–*ஐ எல்லாம் வாங்கிவரச் சொல்வதாகச் சொல்கிறார்கள். அதேமாதிரி* Blood Test *எடுப்பதற்கு வாரத்திற்கு இரண்டு நாட்கள் மட்டும்தான்* Lab Technician *வருகிறார் என்று சொல்கிறார்கள். 1998 ஆம் ஆண்டு இந்த ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்கப்பட்டு* Autoclave machine, ECG *அன்றைக்கு வாங்கியதுதான் அதற்குப் பிறகு இல்லை. சுற்றுச் சுவரும் இல்லையென்று சொல்கிறார்கள். நான் அந்த மருத்துவர்களிடம் பேசியபோது,* People Welfare Society Fund *அவர்களுக்கு ரூ.1.75 இலட்சம்* allot *செய்திருக்கிறீர்கள். ஆனால், சென்ற வருடம் ரூ.1.3 இலட்சம்தான் கிடைத்திருக்கிறது. இந்த வருடம் ஒரு இலட்சம் ரூபாய் கிடைத்திருக்கிறது. போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் எங்களால்* equipment *வாங்க முடியவில்லை. தயவுசெய்து,* Autoclave, *சுற்றுச் சுவர், அதேமாதிரி* Technicians, medicines *போதிய அளவிற்கு இந்த மருத்துவமனையில் இருக்க தாங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மிகுந்த பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–20

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மானியக் கோரிக்கையில் கேட்ட*

அந்த புதிய ஆரம்ப சுகாதார நிலையம் மாராந்தையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் வழங்கப்பட்டு, திறக்கப்பட்டிருக்கின்றது. அத்துடன் சேர்த்து தாங்கள் இப்போது வைத்துள்ள இந்தக் கோரிக்கைகளையெல்லாம் அரசு உடனடியாகக் கனிவோடு பரிசீலிக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே மருந்துகள் இல்லை என்று சொன்ன அந்த நிலை மட்டும் இல்லை. நீங்கள் சொன்னதைப்போல் ஒரு equipment பழுதாகி இருக்கக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. அதற்காக அங்கே புதிய கருவிகள் வழங்கப்படும். அங்கே சுற்றுச் சுவர் கட்டித் தருவதற்கும் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காக அடுத்த முறை நீங்கள் நன்றி சொல்லக்கூடிய அளவிற்கு மக்கள் நல்வாழ்வுத் துறை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு சிறப்பாக செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கடையநல்லூர் தொகுதிக்கு உட்பட்ட கடையநல்லூர், இக்பால் நகரில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர வேண்டும் என்பதைத் தொடர்ந்து இரண்டு வருடங்களாக நான் கேட்டு வருகின்றேன். இதனை நீங்கள் கருத்தில் கொள்ளவேண்டும். அதேபோன்று வடகரை, கீழ்பிடாகை பகுதியில் இருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் எந்தவிதக் கட்டமைப்பும் இல்லாமல் இருக்கின்றது. அதே பகுதியில் இருக்கக்கூடிய வாவாநகரத்திலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை உருவாக்கித் தர வேண்டும். அதேபோன்று கிராமப்புறங்கள் மற்றும் மலைவாழ் மக்கள் வாழக்கூடிய பகுதியான புளியறையில் இருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையத்தில் மகப்பேறுக்கு பெண் மருத்துவர் இல்லாமல் அங்கே சிரமப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள் என்பதனைத் தொடர்ந்து நான் சுட்டிக்காட்டி வருகின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதையெல்லாம் கவனத்தில் கொள்ளவேண்டும். அதேபோல், கடையநல்லூர் நகராட்சியில் இருக்கக்கூடிய மருத்துவமனையில் மருத்துவர்கள், செவிலியர்கள் பற்றாக்குறை ஏற்கெனவே இருக்கின்றது. இந்தச் சூழ்நிலையில்

2018 ஜூன் 26]

கடையநல்லூரில் இருக்கக்கூடிய செவிலியர்கள் இரண்டு பேரை deputation–ல் மாற்றிவிட்டதாக நேற்றிலிருந்து சொல்லி வருகின்றார்கள். இதையும் இந்த அரசாங்கம் கவனத்தில்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர், சற்று இருங்கள். திரு. அபூபக்கர், இந்தத் தொடரில் மட்டும் உங்களுக்கு ஒரு மூலக் கேள்வி, இந்தக் கேள்வியோடு மொத்தம் 7 துணைக் கேள்விகள் கொடுத்திருக்கிறேன். ஆனால், அவர் உட்கார்ந்துகொண்டு குற்றச்சாட்டு வாசிக்கின்றார். பக்கத்தில் இருக்கின்ற உறுப்பினரிடத்தில் எனக்கு வாய்ப்புத் தரவில்லை, வாய்ப்புத் தரவில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கின்றார். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் உட்காருங்கள். நான் இங்கிருந்து பார்த்துக்கொண்டுதான் இருக்கின்றேன். நீங்கள் திரு. கரி இராமசாமியிடம் என்ன பேசிக்கொண்டிருந்தீர்கள் என்பதை வேண்டுமானால் நான் உங்களுக்கு காட்டுகின்றேன். அதையெல்லாம் நான் கேட்டுக்கொண்டுதான் இருக்கின்றேன், பார்த்துக்கொண்டுதான் இருக்கின்றேன். (குறுக்கீடு) இல்லை, இப்படியெல்லாம் இல்லை. இங்கே நான் எத்தனை பேருக்கு எத்தனை கேள்விகளைக் கொடுக்கின்றேன் என்பதை நான் குறித்து வைத்துக்கொண்டுதான் இருக்கின்றேன். கேள்வி கேட்காத உறுப்பினர்களுக்குத்தான் நான் வாய்ப்பு கொடுத்துக்கொண்டிருக்கின்றேன். ஆகவே, இப்படியெல்லாம் நீங்கள் செய்வது முறை அல்ல, சரி இல்லை, உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் இப்போது அதற்கு நீங்கள் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலமாக மருத்துவச் சேவைகளை அளிப்பது மட்டுமல்லாமல் – பொதுவாக மருத்துவமனைகளை நாடி நோயாளிகள் வருகின்றார்கள். நோயாளிகளைத் தேடி, பொதுமக்களைத் தேடி மருத்துவ வசதி செல்லக்கூடிய நிலையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உறுதிபடுத்தியிருக்கின்றது. இது மிகவும் முக்கியமான விஷயம். 416 நடமாடும் மருத்துவமனைகள், அதாவது mobile hospitals இரண்டு மருத்துவர்களோடு ஒரு மாதத்திற்கு 40 இடங்களில்,

ஆரம்ப சுகாதார நிலையங்கள் இல்லாத இடங்களில், ஒவ்வொரு கிராமமாகச் சென்று அங்கே இருக்கக்கூடிய மரத்தடியில் அந்த நடமாடும் மருத்துவமனையை நிறுவிக்கொண்டு, அங்கே நோயாளிகளை அழைத்து அவர்களுக்கு தொற்றும் நோய்கள், தொற்றா நோய்கள் போன்ற எல்லா நோய்களுக்கும் மருத்துவம் பார்க்கின்ற அளவிற்கு இந்தியாவிலேயே ஒரு நடமாடும் மருத்துவமனைத் திட்டத்தைத் தொடங்கி, அங்கு கிராமப்புற சுகாதாரத் திட்டத்தை உறுதிப்படுத்தக்கூடிய மாநிலம் நம்முடைய தமிழ்நாடு என்ற பெயரைப் பெற்றிருக்கின்றது, விருதினைப் பெற்றிருக்கின்றது. இருப்பினும், அதையும் தாண்டி தாங்கள் சொல்லியிருக்கக்கூடிய இரண்டு, மூன்று கோரிக்கைகளையெல்லாம் இங்கே நான் பதிவு செய்துகொண்டேன். தங்களுக்கு திருப்தி ஏற்படக்கூடிய நடைமுறையை நான் ஏற்படுத்தித் தருகின்றேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 219, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

219—

வேளாண்மை விற்பனை நிலையம்

***4840—திரு. பி.வி. பாரதி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் புதிய வேளாண்மை விற்பனை நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. துரைமுருகன், என்னவென்று சொல்லுங்கள். எனக்குத் துணையாகப் பேசுங்கள்.*

திரு. துரைமுருகன்: *உங்களுக்குத் துணையாகத்தான் பேசுகின்றேன். நான் எப்போதுமே உங்களுக்கு 'For'தான் சார். இன்றைக்கு Police Department Demand.***

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*